**தலைப்பு 331 – திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 331 – திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 17 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 54,759.85 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 52,330.09 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான ரூபா 2,429.76 மில்லியன் அதாவது 4.44 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 53,439.90 | 51,306.09 | 2,133.81 | 3.99 |
| மூலதனம் | 1,319.95 | 1,024.00 | 295.95 | 22.42 |
| மொத்தம் | 54,759.85 | 52,330.09 | 2,429.76 | 4.44 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு கருமங்களுக்காக திணைக்களத்திற்கு வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சினால் ரூபா 1,363.4 மில்லியன் கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 1,182.0 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க, ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 181.4 மில்லியன் அதாவது 13.30 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 33101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 235.0 | 221.5 | 90.0 | 206.7 | 100.0 | 14.8 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கீழான 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 7002/0000/00/0431/0015/000 ஆம் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 1,019.8 மில்லியனாக இருந்தது.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழான 03 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,600.0 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கணக்குகள் இல.** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா மில்லியன்** |
| 6000/0000/00/0015/0099/000 | 2,449.4 |
| 6000/0000/00/0015/0205/000 | 150.4 |
| 6000/0000/00/0015/0160/000 | 0.2 |
| | 2,600.00 |

**2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | **பதிவேடுகளின் வகை** | **உரிய பிரமாணம்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|---|
| (ஆ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | வாகனங்கள் நிரல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 802 மற்றும் 1647(இ) மற்றும் (உ) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (எ) | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மொனராகலை சுற்றுலா விடுதி அமைந்துள்ள மாவட்ட செயலக காணி, கட்டிடங்கள் மற்றும் தக்ஷின அபிவிருத்தி நிதிக் கம்பனி அமைந்துள்ள கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அச்சொத்துக்களின் பெறுமதி முறையே ரூபா 27.90 மில்லியன் மற்றும் ரூபா 11.96 மில்லியனாக இருந்தது.

### 3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 17 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன், தாமத காலம் 2 மாதங்கள் முதல் 15 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்தது. அந்த ஐயவினாக்களுக்கு உரித்தான கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 2,009.34 மில்லியனாக இருந்தன.

### 3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.4.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 11.20 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 24 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் மொத்தம் ரூபா 272.87 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அவை அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 40 சதவீதம் முதல் மற்றும் 95 சதவீதமான வரையான வீச்சினைக் கொண்டிருந்தன.

### 3.5 கட்டுநிதிக் கணக்குகள்

2016 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களின் போது திவிநெகும சமுதாய வங்கிகள் மற்றும் மாவட்ட அலுவலகங்களினால் தீர்க்கப்பட்டிருந்த கட்டுநிதி மீதி ரூபா 24.69 மில்லியன் ஆக இருந்த போதிலும், 2016 யூலை 07 ஆந் திகதி அளவிலும் திறைசேரிக்கான தீர்ப்பனவை திணைக்களத்தினால் தாமதமாக்கப்பட்டிருந்தது.

### 3.6 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட அலுவலகங்களுக்குரிய பொது வைப்புக் கணக்கில் திறைசேரி கணனி அச்சீடு மற்றும் வைப்பு பதிவேடுகளுக்கிடையே ரூபா 14.96 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், அதற்குரிய தனிப்பட்ட மீதிகள் பட்டியல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது சமுர்த்தி உதவி கொடுப்பனவிற்காக வங்கி நிதிப் பிரிவின் முதலீடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அப்பணத்திலிருந்து மீள தீர்க்கப்படாத ரூபா 2,449.50 மில்லியன் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

33101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணித்த, ஓய்வுபெற்ற மற்றும் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த 67 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,372,194 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகள் 01 மாதம் முதல் 21 ஆண்டுகள் வரையான காலமாக இருந்து வந்தன. அந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த பெறவேண்டிய கடன் மீதி ரூபா 130.16 மில்லியனாக இருந்ததுடன், அம்மீதிகளை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட பின்தொடர் நடவடிக்கை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.8.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட 1485 கணக்காய்வு வினாக்களுக்காக பதிலளிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஐயவினாக்கள் தொடர்பாக போதியளவு பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வு கால அட்டவணைக்கு ஏற்ப கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தவறியிருந்தது. மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், திவிநெகும சமுதாய வங்கிகள் மற்றும் 1378 வங்கிச் சங்கங்களும் சமூக பாதுகாப்பு நிதியம் உட்பட 03 நிதியங்களிலும் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் தலைமை அலுவலகத்திற்காக போதியளவு கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.8.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

குறைந்தது காலாண்டிற்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது இரண்டு தடவைகள் மாத்திரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

### 3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கின் நடைமுறையல்லாத சொத்துக்கள் அசைவுக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,235.21 மில்லியனாக இருந்த போதிலும், அதற்குரிய பட்டோலையின் மீதி ரூபா 1,121.16 மில்லியனாக இருந்தமையால் ரூபா 114.05 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. ‘‘கையேற்கப்பட்டிருந்த நிறுவனத்தினால் முறையாக சொத்துப் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை இதற்கான காரணமென’’ பணிப்பாளர் நாயகத்தினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

காணியின் சிக்கலற்ற உரித்தை கையேற்காத இலங்கை தக்ஷின அபிவிருத்தி அதிகாரசபையின் மூன்று மாடிகளுடன் கூடிய பயிற்சி நிலையமொன்றாக பேணப்பட்டு செல்லப்படும் தலைமை அலுவலக கட்டிடத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,618,329 பராமரிப்புச் செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. போதியளவு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக அக்கட்டிடம், உபகரணங்கள் மற்றும் பதவியணி விளைவற்றுக் காணப்பட்டன. ’’எதிர்காலத்தில் இக்கட்டிடத்தை தக்ஷின அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென’’ பணிப்பாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**(இ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வங்கி காகிதாதிகளின் சுழற்சி நிதியத்தின் கைதவிர்க்கப்பட வேண்டிய இருப்பின் பெறுமதி முறையே ரூபா 1,187,288 தொகை மற்றும் ரூபா 1,207,793 தொகையாக இருந்ததுடன், திணைக்களத்தின் ஏனைய மெய்மையாய்வு அறிக்கைகளிள் உள்ளடக்கப்பட்டிருந்த கைதவிர்க்கப்பட வேண்டிய இருப்பின் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ii) வங்கி காகிதாதிகளின் சுழற்சி நிதியத்தின் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இருப்பு பற்றாக்குறை முறையே ரூபா 466,185 தொகையும் ரூபா 384,063 தொகையும் இருப்பு மிகைகள் முறையே ரூபா 376,937 மற்றும் ரூபா 132,676 தொகையாக இருந்ததுடன், அது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் திணைக்களத்திடமுள்ள 23 வாகனங்கள் 06 அரச நிறுவனங்களுக்கும் தனிப்பட்ட தரப்பினருக்கும் வழங்கப்பட்டிருந்தன. இரண்டு அமைச்சுகளுக்கு வழங்கப்பட்ட வாகனங்களைப் பராமரிப்பதற்காக முன்னைய ஆண்டின் போது ரூபா 242,422 தொகையும் மீளாய்வாண்டின் போது ரூபா 574,557 தொகையுமாக ரூபா 816,979 கூட்டுத்தொகை திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

(ii) இலங்கை தக்ஷின அபிவிருத்தி அதிகாரசபையால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 09 காணி மற்றும் கட்டிட ஆதனங்கள் திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டு குறித்த குத்தகையாளருடன் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகாரசபைக்கு உரித்தாக இருந்ததென கருதி குத்தகைக்கு வழங்கி தற்போது குத்தகைக் காலம் முடிவடைந்திருந்த 06 ஆதனங்கள் ஏனைய அரச நிறுவனமொன்றுக்கு உரித்தாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால் அவற்றிற்குரிய சீராக்கல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இலங்கை தக்ஷின அபிவிருத்தி அதிகாரசபையால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 11 ஆதனங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை குத்தகை வாடகை மற்றும் தண்டப்பணமாக திணைக்களத்தின் பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 1,671,898 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(உ) கையேற்கப்பட்டிராத சொத்துக்களை பயன்படுத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்திற்கு ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனங்களால் திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படாமல் இருந்தமையால், அந்நிறுவனங்களுக்குச் சொந்தமானதென இறுதியாக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 1,526.55 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் அனைத்து சரியாக கையேற்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.

(ii) திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்குச் சொந்தமாக காணப்பட்ட 128 வாகனங்களின் கையேற்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்ப்பபட்டிருக்கவில்லை.

(iii) கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 10 மோட்டார் சைக்கிள்களுக்குரிய கோவைகளைப் பொறுப்பேற்றிருந்த போதிலும், அவை பௌதீக ரீதியாக பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினால் டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள காணிக்கு 2004 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை ரூபா 38,077,500 ஆன குத்தகை வாடகை செலுத்தப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன், அக்காலப்பகுதியில் களஞ்சியக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. குத்தகை காலத்தை நீடித்து திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தை அக்காணியில் நிர்மாணிப்பதற்கு தவறியதன் காரணமாக திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள செத்சிரிபாய வளவிற்காக மாதாந்தம் ரூபா 4.25 மில்லியன் வீதம் வாடகையொன்று செலுத்த நேர்ந்துள்ளது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த மொத்த கட்டிட வாடகை ரூபா 571.07 மில்லியனாக இருந்தது.

**(ஊ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 8,428.36 மில்லியனாக இருந்ததுடன், அதில் ரூபா 8,415.78 மில்லியனான பொறுப்புக்கள் 1 முதல் 3 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வந்திருந்த போதிலும், அவற்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 3 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்களை மிகைத்து ரூபா 5,427.89 மில்லியனான பொறுப்புக்களுக்கு உட்பட்டு காணப்பட்டது.

(இ) 'இசுரமத் நிவஹனக்' நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,992.78 மில்லியன் பொறுப்புகளுக்கு கடப்பாடு காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது பொறுப்பொன்றாக ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான பொறுப்பொன்றை ஏற்படுத்துவதற்கு தேவையான நிதிஏற்பாடு வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து திணைக்களத்திற்கு நிதிஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. ''மேற்குறித்த கடப்பாட்டிற்காக கொடுப்பனவு செய்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக'' பணிப்பாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 3.10 இணங்காமைகள்

### 3.10.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 2013 இன் 1 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச்சட்டம் | | |
| (i) 9 ஆம் பிரிவு | - | திவிநெகும நலனாளிகளின் சுய பங்களிப்புடக் கூடிய திவிநெகும சமுதாய அமைப்புக்கள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 34 ஆம் பிரிவு | - | அனைத்து திவிநெகும சமுதாய அடிப்படை வங்கிகளிலிருந்தும் அனைத்து திவிநெகும சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களிலிருந்தும் கூடிய சமுதாய அடிப்படை வங்கி பெரிய சங்கமொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 36 ஆம் பிரிவு | - | அதிகாரச்சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக திவிநெகும அபிவிருத்தி நிதியமொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iv) 37 ஆம் பிரிவு | - | திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒன்றிணைக்கப்பட்ட அதிகாரசபைகளில் காணப்பட்ட அனைத்து பணத்தையும் செலவு வைத்து தாபிக்கப்பட வேண்டிய திவிநெகும சுழற்சி நிதியம் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | |
| (i) நிதிப் பிரமாணம் 103(1) | 668,325 | 2011 ஆம் ஆண்டில் விபத்திற்குட்பட்ட லொறி வண்டியின் ஆரம்ப அறிக்கை மற்றும் பூரண அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், நட்டத்தை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 763 | - | தலைமை அலுவலகத்தின் களஞ்சியப் பொருட்கள் மற்றும் எழுதுகருவி சுழற்சி நிதியத்தின் இருப்புக்கள் தொடர்பாக களஞ்சிய சட்டவிதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(iii) நிதிப் பிரமாணம் 880 - அரசின் சொத்துக்களுக்கு பொறுப்பாக நடவடிக்கை எடுக்கும் எந்தவொரு உத்தியோகத்தரிடமிருந்தும் அரச உத்தியோகத்தர்களிடம் பிணைப்பொறுப்பு கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) **பொது நிர்வாக சுற்றறிக்கை**

(i) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.11 ஆம் பந்தி - 06 மாதங்களுக்கு ஒரு முறை வாகனங்களின் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ii) 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க சுற்றறிக்கை - உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்கள் தவிர ஏனைய வாகனங்களில் அரச இலட்சினை மற்றும் திணைக்களத்தின் பெயர் என்பவற்றை பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.10.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.12 வழிகாட்டியின் பிரகாரம் பெறுமதி சேர்க்கப்பட்ட அடிப்படையிலான வரியை மேவுகை செய்வதற்காக செலுத்திய பணம் தொடர்பான விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறை வரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், தெரிவுப் பரிசோதனைகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 5,771,225 ஆன வரித்தொகை தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சமூர்த்தி அதிகாரசபையினால் பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்காக சொகுசு மற்றும் அரைச் சொகுசு இரட்டைநோக்கு வரித் தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் வரித்தொகை மற்றும் தண்டப்பணம் என மொத்தமாக ரூபா 1,284,000 திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.11 வங்கிக் கணக்கினை செயற்படுத்துவதிலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 395(ஈ) பிரகாரம் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு மற்றும் எழுதுகருவி சுழற்சி நிதியம் ஆகிய வங்கிக் கணக்குகளின் வங்கிக் கணக்கிணக்கக்கூற்றுகளைத் தயாரிப்பதில் நீண்ட தாமதமொன்று நிலவியது.

(ஆ) உத்தியோகபூர்வ வங்கி நடைமுறைக் கணக்கின் வங்கிக் கூற்றின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 715,750,526 ஆக இருந்த போதிலும், அத்திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 1,055,870,433 பெறுமதியான 682 காசோலைகள் இருந்தமையால் வழங்கப்பட்ட காசோலைகளைத் தீர்ப்பதற்கு வங்கி மீதி போதாமல் இருந்தது. அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளில் 06 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட

காலத்தை விஞ்சியிருந்த ரூபா 122,787 பெறுமதியான 33 காசோலைகளும் இரத்துச் செய்யப்பட்ட ரூபா 1,329,737 பெறுமதியான 13 காசோலைகளும் காணப்பட்ட போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அது தொடர்பாக 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் ரூபா 5,323,468 இனங்காணப்படாத வரவும், ரூபா 31,554,687 ஆன இனங்காணப்படாத செலவும் 01 மாதம் முதல் 08 மாதங்கள் வரையான காலப் பகுதியிலிருந்து வரும் வைப்புச் செய்யப்பட்டும் தீர்வையாகாத ரூபா 265,333 பெறுமதியான 09 காசோலைகளும் உள்ளடங்கியிருந்தன.

(ஈ) திணைக்களத்திற்கு இணைக்கப்பட்ட இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் உத்தியோகபூர்வ வங்கக் கணக்கு 2015 செப்தம்பர் 21 ஆந் திகதி தீர்க்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த மாவட்ட செயலகங்கள் மற்றும் 42 பிரதேச செயலங்கள் என்பவற்றின் வங்கிக் கணக்குகளில் ரூபா 3,622,105 ஆன மீதிகள் அதற்குப் பின்னர் தீர்க்கப்பட்டமையால் வங்கிக் கணக்கு முறையற்ற பயன்பாட்டிற்கு இடமளிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

**3.12 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

எழுதுகருவி சுழற்சி நிதியத்தின் களஞ்சியத்தில் இருப்பு மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பௌதீக மீதி மற்றும் புத்தக மீதி என்பவற்றிற்கிடையே வேறுபாடு அவதானிக்கப்படாத போதிலும், கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் இருப்பு அறிக்கைகளில் 05 எழுதுகருவி வகைகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 177400 அலகுகளான இருப்பு மீதியொன்று குறைத்துப் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அதன் பெறுமதி ரூபா 1,053,802 ஆக இருந்தது.

**3.13 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையிலிருந்து விலகுதல்**

திணைக்களத்தின் மாவட்ட திவிநெகும அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கொள்வனவுகள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) சீதாவக்க பிரதேச செயலகத்தினால் திவிநெகும ஜீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 4,098,577 பெறுமதியான 20 வகைப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.1, 4.3, 6.33, 5.1 மற்றும் 5.2 ஆகிய வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.9.1 வழிகாட்டலுக்கு புறம்பாக ரூபா 2 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியை மிகைத்து பிடிபன மற்றும் நேபட திவிநெகும சமூக அடிப்படையிலான படையணியால் ரூபா 2.55 மில்லியன் மற்றும் ரூபா 2.50 மில்லியனான வங்கிக் கட்டிடங்கள் நிர்மாணங்கள் 03 கிராமிய சமுர்த்தி படைகளுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. அப்படைகளால் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்திற்குரிய ஆவணங்கள் எதுவும் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்டங்களில் செயற்படுத்தப்படும் திவிநெகும ஜீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக மாவட்ட திவிநெகும மேலதிகப் பணிப்பாளரின் / மாவட்ட திவிநெகும பணிப்பாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சீதாவக்க பிரதேச செயலகத்தினால் அங்கீகாரமொன்று இல்லாமல் ரூபா 870,000 செலவில் 30 ஜுகி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) 37 சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிசோதனையொன்று மேற்கொள்ளாமல் வாகனங்கள் திருத்தியமைக்கப்பட்டு அதற்காக திணைக்களத்தின் நிதி அதிகார எல்லையை விஞ்சி அங்கீகரிக்கப்பட்ட திருத்தங்களுக்காக மொத்தம் ரூபா 1.16 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**3.14 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை தக்ஷின அபிவிருத்தி அதிகாரசபையினால் இரண்டு காணிகளை கையேற்பதற்காக ரூபா 2.65 மில்லியன் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், அக்காணிகளை கையேற்பதற்கோ அல்லது வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.15 முகாமைத்துவ பலவீனங்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது சீதாவக்க பிரதேச செயலகப் பிரிவில் ஜீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 105 நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கடன்களில் ரூபா 3.16 மில்லியன் அறவிடப்படாத செயலற்ற மீதிகளாக காணப்பட்டன.

(ஆ) கூடிய அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு உதவிக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக திவிநெகும வங்கிகளுக்கு அனுப்பப்பட்ட பணத்தில் உள்ளவாறான உதவிச் செலவினம், மேலதிக கட்டுநிதி மற்றும் மீளக் கிடைத்த எஞ்சிய பணம் என்பன மாதாந்தம் ஒப்பிடப்பட்டு சரியான உதவிக் கொடுப்பனவு செலவினங்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் உதவிக் கொடுப்பனவுகள் செலுத்தி எஞ்சிய பணம் முழுவதையும் வங்கியால் தலைமை அலுவலகத்திற்கு மீள அனுப்பியிருந்தது உறுதிப்படுத்தப்படாமல் இருந்ததுடன், திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருந்த மீளாய்வாண்டின் ரூபா 39,994.33 மில்லியன் தொகையான உதவிக்கொடுப்பனவுச் செலவினம் சரியானதல்ல என 2016 யூலை மாதத்தின் போது மாற்றல் பத்திரமொன்று மூலம் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 32.39 மில்லியன் செலவினம் 2016 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்வதற்கு எடுக்கப்பட்ட அனுமதியிலிருந்து கண்டறியப்பட்டது.

(இ) நலனாளிகளின் வீட்டுப் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வொன்று வழங்கும் நோக்குடன் மாதாந்தம் சீட்டிழுப்பு நடாத்தப்பட வேண்டிய வீடமைப்பிற்காக அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நாளதுவரையாகாத தகவல் முறைமையொன்றினை பயன்படுத்தி ஒரே தடவையில் சீட்டிழுப்பு நடாத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக தகவல்கள் கண்டுபிடிக்க முடியாத பரிசுகள் உரித்தாக்கிக் கொண்ட 151 உதவிபெறுவோருக்கு ரூபா 22.65 மில்லியன் பணத்தை விடுவிக்க முடியாதிருந்தன.

(ஈ) ‘‘ரட்டவிரு’’ வீடமைப்பு உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியளவில் 23 மாவட்டங்களில் 8,850 தொழிலாளர்களுக்கு வீடமைப்பிற்காக ரூபா 1,159.52 மில்லியனான கடன் வழங்கப்பட்டிருந்தது. அக்கடன்தொகையில் 1,625 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 132.68 மில்லியனான கடன் கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. அத்தொகையை ரூபா 100 மில்லியனான வைப்புப் பணத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளக்கூடிய இயலுமை உள்ளதா என உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(உ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையிலிருந்து விலகி தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து ஓடுகள் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 9.77 மில்லியன் தொகை செலவு செய்து ஓடுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியின் போது இந்த வேலைத்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. மேலும் வீடொன்றை அமைப்பதற்கு இயலுமை இல்லாதவர்களுக்கு ஓடுகள் மாத்திரம் வழங்கியதன் காரணமாக நலனாளிகளுக்கு ஓடுகளை கூரையாக்குவதற்கு முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.

(ஊ) திணைக்களத்தின் விடயப் பரப்பிலிருந்து விலகி திறைசேரி அங்கீகாரமொன்று இல்லாமல் 194 பிரதேச சபை உறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கில்கள் கொள்வனவு செய்வதற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் திவிநெகும சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் மூலம் ரூபா 9.69 மில்லியனான கடன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் 124 உறுப்பினர்களிடமிருந்து ரூபா 3.09 மில்லியன் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(எ) தக்ஷின அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய இரத்தினபுரி மாவட்டத்தின் கொலன்ன பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள 01 ஏக்கர் அளவிலான பனில்கந்த தேயிலை தொழிற்சாலைக் காணியை கையேற்பதற்காக கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 2.98 மில்லியன் தொகையைச் செலுத்தி கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 1997 யூன் 17 ஆந் திகதிய 980/22 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் தக்ஷின அபிவிருத்தி அதிகாரசபைக்கு, மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் 110 ஏக்கர் காணியை கையேற்பதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அக்காணி கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) எழுதுகருவி சுழற்சி நிதியத்திற்கு பொறுப்பாக இருந்த களஞ்சியக் காப்பாளர் பொறுப்பில் காணப்பட்ட களஞ்சிய எழுதுகருவிகள் மற்றும் இருப்பு பதிவேடுகள் என்பவற்றை புதிய களஞ்சியக் காப்பாளருக்கு கையளிக்காமல் 2014 ஆம் ஆண்டின் போது இழப்பீடு மற்றும் பணிக்கொடை வழங்கப்பட்டு சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்பட்டிருந்தது. புதிய களஞ்சியக் காப்பாளர் அத்திகதியில் கணக்கிட்டு பதிவேடுகளுக்குட்படுத்தப்பட்ட ரூபா 1.87 மில்லியன் எழுதுகருவிகளின் பெறுமதி சரியானதா என உறுதிப்படுத்தாமல் களஞ்சியத்தை பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.16 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 665 | 86 | 579 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 245 | 36 | 209 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 31,092 | 23,606 | 7,486 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 762 | 210 | 552 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக / ஒப்பந்த அடிப்படை) | - | 30 | - | 30 |
| | மொத்தம் | 32,764 | 23,968 | 8,826 | 30 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பினை அங்கீகரித்துக் கொள்வதில் தாமதம் காரணமாக ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தாமதம் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் 8,826 வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது.

(ii) பதவிநிலை தர உத்தியோகத்தர் பதவிகளில் 87 சதவீதம் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன், அப்பதவிகளின் பகுதியொன்று வேலை மேவுகை அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தது.

(iii) 17 பதவிப் பெயர்களின் கீழ் 327 சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்கள் உட்பட 423 உத்தியோகத்தர்களுடன் பதவியணியொன்று 5 வலய அலுவலகங்களுக்காக 2014 நவம்பர் 19 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வலய அலுவலகங்கள் இல்லாமல் செய்யப்பட்டதுடன், பதவியணியை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது 15 இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் அமைச்சரின் பதவியணிக்கும் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(இ) திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பரீட்சை சான்றிதழ்களில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு வழங்ககூடாது என தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவினால் 2011 மே 13 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக நிதி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ஆலோசணைகளுக்கு புறம்பாக ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றை பின்பற்றாமல் ஒரு உத்தியோகத்தருக்கு 2011 ஆகஸ்ட் 03 ஆந் திகதி முதல் உதவிப் பணிப்பாளர் பதவியொன்றுக்காக பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது.